மேற்காணும் புலங்களை தலத்தணிக்கை செய்ததில், வளையப்பட்டி கிராமம், புல எண்கள் 688/8, பரப்பு 0.05.5, புல எண் 688/9, பரப்பு 0.08.0, புல எண் 688/10, பரப்பு 0.08.5 ஆகிய பட்டா நிலங்களும், புல எண் 687/2A, பரப்பு 0.19.5, புல எண் 687/2B, பரப்பு 0.13.5, புல எண் 687/2C, பரப்பு 0.20.5, புல எண் 687/2D, பரப்பு 0.15.0 ஆகிய பட்டா நிலங்களும், புல எண் 121/4, பரப்பு 2.00.5 அரசு புறம்போக்கு தரிசு என்ற நிலமும், மேற்படி சிப்காட்டிற்கு நில எடுப்பு செய்யப்படவுள்ள புலங்களுக்கு இடையில் அமைந்துள்ளதால், இந்த புலங்களையும், நில எடுப்பு செய்யலாம். மேலும், வளையப்பட்டி கிராமம், 84/2, பரப்பு 0.01.0 என்பதற்கு பதிலாக 84/1, பரப்பு 0.01.0 ஆகியவை கிராம மற்றும் இணையவழி அ-பதிவேட்டு மற்றும் புலப்படநகல் ஆகியவற்றில் கிராமநத்தமாக மாற்றம் செய்யப்பட்டு இரண்டு நபர்களுக்கு இலவச வீட்டுமனை 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி புல எண்கள் நத்தம் கணக்கிற்கு கொண்டுசெல்லாத காரணத்தால் அதற்கு பட்டா எண் கொடுக்காமல் நாளதுவரை அனுபந்த பட்டாவாகவே உள்ளது. மேலும் LPS-ன்படி வளையப்பட்டி புல எண் 764, அரசு புறம்போக்கு கரடு என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் பரப்பு 4.14.0 என்பதற்கு பதிலாக 1.64.0 எனவும், புல எண் 759/1, பரப்பு 3.02.0 ஹெக்டேர் என்பதற்கு பதிலாக 0.52.0 என்றும் தவறாக உள்ளது. வளையப்பட்டி கிராம புல எண்.649 என்ற புலமானது 649/1 மேய்ச்சல் என்றும், 649/2 பட்டா நிலமாகவும் கிராம மற்றும் இணையவழி அ-பதிவேட்டு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் புலப்படநகலில் 649 என்பது உட்பிரிவு ஏதும் செய்யப்படாமல் ஒரே புலமாகவே உள்ளது. என்.புதுப்பட்டி கிராமம், புல எண் 854/4B, பரப்பு 0.31.0 அரசு புறம்போக்கு தரிசு என்பதற்கு பதிலாக 854/1B எனவும், புல எண் 894/1, அரசு புறம்போக்கு தீ.ஏ.தரிசு பரப்பு 1.64.5 பதிலாக 0.43.0 எனவும், அரூர்

கிராமம் புல எண் 667/1, மொத்த பரப்பு 16.40.0 என்பதற்கு பதிலாக 14.40.0 எனவும் மேற்காணும் LPS –ல் உள்ளதை, திருத்தம் செய்தும், இருமுறை பதிவு செய்யப்பட்டுள்ள புலங்கள் 760 மற்றும் 761 ஆகியவற்றின் மொத்த பரப்பு 5.13.0 ஹெக்டேர் நிலங்கள் போக நில எடுப்பு செய்யப்படவுள்ள நிலங்களில் விபரம் கீழ்கண்டவாறு:

சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கு வளையப்பட்டி, நா.புதுப்பட்டி மற்றும் அரூர் ஆகிய மூன்று கிராமங்களில் LPS ன்படி நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம்

செய்ய உத்தேசிக்கப்பட்ட நிலங்களின் தொகுப்பு:

வ. எண்	கிராமம்	நில எடுப்பு செய்யப்படவுள்ள பட்டா நிலங்களின் பரப்பு (ஹெக்டேர்)	நில உரிமை மாற்றம் செய்யப்பட உள்ள புறம்போக்கு நிலங்களின் பரப்பு (ஹெக்டேர்)	மொத்தப் பரப்பு (ஹெக்டேர்)
1.	வளையப்பட்டி	82.26.50	93.79.0	176.05.5
2.	நா.புதுப்பட்டி	111.82.50	17.39.0	129.21.50
3.	அரூர்	0.00.00	14.40.0	14.40.0
மொத்தம்		194.09.00	125.58.0	319.67.00
ஏக்கரில்		479.40	310.18	789.58

2.நிலங்களின் அமைவிடம்:

சிப்காட் தொழிற்பூங்கா அமையவுள்ள நிலங்கள் நாமக்கல் முதல் திருச்சிராப்பள்ளி செல்லும் சாலையில் புதுப்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து தெற்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளன. மேலும் நா.புதுப்பட்டி சர்வே எண்.881 இருந்து 311 வழியாக கிழக்கே திருச்சிராப்பள்ளி செல்லும் சாலையை 3 கிலோமீட்டர் தொலைவில் அணுகலாம். மேற்படி அணுகுசாலையானது போக்குவரத்துக்கு உகந்ததாக உள்ளது. மேலும் வளையப்பட்டி கிராம சர்வே எண்.678, 682/1, 690, 691, 696, 697 மற்றும் 698 ஆகிய புறம்போக்கு நிலங்கள் வழியாக கிழக்கே திருச்சிராப்பள்ளி செல்லும் சாலையை 2 கிலோமீட்டர் தொலைவில் அணுகலாம்.

பட்டா நிலங்களின் விவரம்:

மாவட்டம்: நாமக்கல் **வட்டம்: மோகனூர்** **கிராமம்: வளையப்பட்டி**

வ. எண்	புல எண்	மொத்த விஸ்தீரணம் (ஹெக்டேர்)	உத்தேச உட்பிரிவு எண்	நில எடுப்பு செய்யும் விஸ்தீரணம் (ஹெக்டேர்)	வகைபாடு	பட்டா எண்	10–1 சிட்டாவின் படி உரிமையாளர் பெயர்	தலத்தணிக்கையில் கண்டறியப்பட்ட மரங்கள், கட்டுமானங்கள், கட்டடங்கள் மற்றும் பயிர்கள் விவரம்
1.	83/2	0.00.68	83/2	0.00.68	கிராம நத்தம்	–	சாந்தி க.பெ முருகேசன்	அட்டைவீடு இலவச வீட்டு மனைப்பட்டா வரன்முறை படுத்தவில்லை
2.	84/2	0.00.47	84/2	0.00.47	கிராம	–	செல்வமணி க.பெ பொன்னுசாமி	அட்டை வீடு,கடை , இலவச வீட்டு

141	நா.புதுப்பட்டி	895/3	0.77.5	0.77.50	2965500	2298263
142	நா.புதுப்பட்டி	896/1	1.21.5	1.21.50	2965500	3603083
143	நா.புதுப்பட்டி	896/2	1.17.5	1.17.50	2965500	3484463
144	நா.புதுப்பட்டி	897/2	1.02.5	1.02.50	2965500	3039638
145	நா.புதுப்பட்டி	897/3	0.56.5	0.56.50	2965500	1675508
146	நா.புதுப்பட்டி	897/4	0.56.5	0.56.50	2965500	1675508
147	நா.புதுப்பட்டி	898/1	0.91.5	0.91.50	2965500	2713433
148	நா.புதுப்பட்டி	898/3	0.83.5	0.83.50	2965500	2476193
149	நா.புதுப்பட்டி	898/4	1.07.0	1.07.00	2965500	3173085
150	நா.புதுப்பட்டி	898/5	1.21.5	1.21.50	2965500	3603083
151	நா.புதுப்பட்டி	899/2	0.71.0	0.71.00	2965500	2105505
152	நா.புதுப்பட்டி	899/3	0.63.5	0.63.50	2965500	1883093
153	நா.புதுப்பட்டி	899/4	1.21.5	1.21.50	2965500	3603083
154	நா.புதுப்பட்டி	900/2	0.81.5	0.81.50	2965500	2416883
155	நா.புதுப்பட்டி	900/4	0.20.0	0.20.00	2965500	593100
156	நா.புதுப்பட்டி	900/5	1.21.0	1.21.00	2965500	3588255
			மொத்தம்	112.11.0		328607705

புல எண் 883/3 –க்கு வழிகாட்டி மதிப்பு இல்லாததால், அருகில் உள்ள புல எண் 883/2 –ன் வழிகாட்டி மதிப்பினையே நிலமதிப்பாக கணக்கிடப்பட்டுள்ளது. புல எண் 884/1 – க்கு வழிகாட்டி மதிப்பு இல்லாததால், அருகில் உள்ள புல எண் 884/2 –ன் வழிகாட்டி மதிப்பினையே நிலமதிப்பாக கணக்கிடப்பட்டுள்ளது.புல எண் 894/7 –க்கு வழிகாட்டி மதிப்பு இல்லாததால், அருகில் உள்ள புல எண் 894/6 –ன் வழிகாட்டி மதிப்பினையே நிலமதிப்பாக கணக்கிடப்பட்டுள்ளது.

நில உரிமை மாற்றம் செய்யப்பட வுள்ள அரசு புறம்போக்கு நிலங்களுக்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்தல்

நில உரிமை மாற்றம் செய்யப்பட உள்ள அரசு புறம்போக்கு நிலங்களுக்கு நில மதிப்பு நிர்ணயம் செய்ய நில உரிமை மாற்றம் செய்யப்பட உள்ள நிலங்களை சுற்றி உள்ள பட்டா நிலங்களுக்கான வழிகாட்டி மதிப்பு சேகரிக்கப்பட்டு, அதில் அதிகமாக உள்ள வழிகாட்டி மதிப்பு கணக்கில் கொண்டு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சிப்காட் தொழிற்பூங்காவிற்கான நில உரிமை மாற்றம் செய்யப்பட உள்ள புறம்போக்கு நிலங்களுக்கு நில மதிப்பு நிர்ணயம்

வ எண்	கிராமங்களின் பெயர்	நில எடுப்பு செய்யவுள்ள புல எண்கள்	புறம்போக்கு நிலங்களுக்கான மொத்த விஸ்தீர்ணம் (ஹெக்டேர்)	நில எடுப்பு செய்யவுள்ள புறம்போக்கு நிலங்களின் விஸ்தீர்ணம் (ஹெக்)	புறம்போக்கு நிலங்களுக்குமதிப்பு நிர்ணயம் செய்ய தேர்வு செய்யப்பட்ட மாதிரி புல எண்கள்	புறம்போக்கு நிலங்களுக்கு மதிப்பு நிர்ணயம் செய்ய தேர்வு செய்யப்பட்ட நிலங்களுக்கான வழிகாட்டி மதிப்பு 01.04.2023 ன்படி ஹெக்டேர் ஒன்றிற்கு (ரூபாயில்)	புறம்போக்கு நிலங்களுக்கான நில மதிப்பு நிர்ணயம்
1	வளையப்பட்டி	83/1	1.86.32	1.86.32	118/1A	1112000	2071878

எடுப்பு அலுவலரால் முன்விலை மதிப்பு நிர்ணயம் செய்யும் பொழுது கணக்கிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.அதே போன்று நில உரிமை மாற்றம் செய்யப்படும் நிலங்களில் உள்ள மரங்கள், கட்டுமானங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத்தொகை நில உரிமை மாற்றம் முன்மொழிவுகள் தயார் செய்யும்போது அதில் சேர்க்கலாம்.

7. கனிம வளங்கள்:-

நில எடுப்புச் செய்யவுள்ள நிலங்கள் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள நிலங்கள் சிறிய மலைப்பகுதிகள் ஆகும். இதில் உள்ள அனைத்து நிலங்களும் கனிம வளங்கள் நிறைந்த பகுதியாகும் என்பதால், மலைப்பகுதிகளை தவிர்த்து மீதமுள்ள பரப்பினை நில உரிமை மாறுதல் செய்யலாம்.

நா.புதுப்பட்டி கிராமம் சர்வே எண்.898/4, 899/4 -இல் உள்ள மொத்த விஸ்தீர்ணம் 2.28.5 ஹெக்டேர் திரு. மணி நிர்வாக பங்குதாரர் ஜெயமணி ப்ளூமெட்டல்ஸ் என்பவருடைய பட்டா நிலத்தில் 5 ஆண்டுகளுக்கு சாதாரண கற்கள் மற்றும் கிராவல் மண் குவாரி உரிமம் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.49/கனிமம்/2017 நாள்.28.08.2017-ன்படி வழங்கப்பட்டுள்ளது. அதன் உரிமக்காலம் 28.08.2022-இல் முடிவுற்றது.

8. மேய்ச்சல் தரை நிலங்கள்:-

வளையப்பட்டி, நா.புதுப்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களில் 7 புல எண்களில் உள்ள 27.93.5 ஹெக்டேர் மேய்ச்சல் தரை நிலங்களுக்குச் சமமான மாற்று நிலங்களை தேர்வு செய்து மேய்ச்சல்தரை நிலங்களாக வகைபாடு மாற்றம் செய்ய நில உரிமை மாற்றம் முன்மொழிவுகள் தயார் செய்யும்பொழுது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

9. கோயில், மசூதி, சர்ச் மற்றும் புராதானச் சின்னங்கள்:

நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள வளையப்பட்டி கிராமம், புல எண் 649/1, அரசு புறம்போக்கு மேய்ச்சல்தரை, பரப்பு 42.32.0 ஹெக்டேர் நிலத்தில் உள்ள கஸ்தூரிரங்கன் பெருமாள் கோவில் 1, பிள்ளையார் கோவில் 1, சுணை கிணறு 7, கம்பத்தடியான் கோவில், பெருமாள் கோவில் 1 ஆகியவற்றினை விடுத்து, 15.74.0 ஹெக்டேர் நிலம் மட்டுமே சிப்காட்டிற்கு நில உரிமை மாறுதல் செய்ய உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு நிலச்சீர்திருத்த சட்டம் 1961:-

மேலே கண்டவாறு 3 கிராமங்களிலும் சிப்காட் சார்பில் தொழில் பூங்கா அமைக்கும் பணிக்காக நில எடுப்பு செய்ய உள்ள 195.27.15 ஹெக்டேர் பட்டா

நிலங்கள் நில எடுப்பு செய்யப்படுவதில் தமிழ்நாடு நிலச்சீர்திருத்த சட்டம் 1961 –ன்படி நிலங்கள் ஏதும் கவரப்படவில்லை.

11. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம்:–

சிப்காட் சார்பில் தொழில் பூங்காஅமைக்கும் பணிக்காக எடுக்கப்படும் பட்டா நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்கள் யாவும் கிராமப்பகுதியாகும் என்பதால் தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம் இதற்கு பொருந்தாது.

12. நன்செய் நிலங்களுக்கான தவிர்க்க இயலா சான்று:–

சிப்காட் சார்பில் தொழில் பூங்காஅமைக்கும் பணிக்காக எடுக்கப்படும் பட்டா நிலங்கள் யாவும் புன்செய் நிலங்கள் என்பதால் நன்செய் நிலங்களுக்கான தவிர்க்க இயலா சான்று பெற வேண்டிய அவசியம் எழவில்லை.

13. நில எடுப்பு அலுவலர்:–

தமிழ்நாடு தொழிலியியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம் –1997 (சட்டம் 10/99) –ன்படி நில எடுப்புச் செய்யவுள்ள நிலங்களுக்கு நில எடுப்பு அலுவலராக மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலான அலுவரை நியமிக்க வேண்டும் என அரசாணை உள்ளதால் இந்நேர்வில் **தனி மாவட்ட வருவாய் அலுவலர்** அவர்களை புதிதாக நில எடுப்பு அலுவலராக நியமனம் செய்யலாம்.

14. நில எடுப்பு பணிக்காக தேவைப்படும் பணியிடம்:–

இவ்வினத்தில் 482.32 ஏக்கர் பட்டா நிலங்களை நில எடுப்பு செய்யவேண்டி உள்ளதால் நில எடுப்பு அலுவலருக்கு உதவிட 250 ஏக்கருக்கு ஒரு யூனிட் வீதம் கீழ்கண்ட பணியாளர்களை உள்ளடக்கிய நில எடுப்பு சிறப்பு அலகு 2 ஏற்படுத்தலாம்.

வ.எண்	பெயர் மற்றும் பதவி	பணியாளர்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	தனி மாவட்ட வருவாய் அலுவலர்	1	61900–196700
2.	தனி வட்டாட்சியர்	2	37700–119500
3.	துணை வட்டாட்சியர்	2	36900–135100
4.	முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் –1, வருவாய் ஆய்வாளர் 1)	4	20600–65500
5.	தட்டச்சர்	2	19500–62000
6.	சார் ஆய்வாளர் (நில அளவை)	2	35400–112400
7.	வரைவாளர்	2	19500–62000

8.	புல உதவியாளர்	2	15700-50000
9.	அலுவலக உதவியாளர்	2	15700-50000
மொத்த பணியிடம்		19	

15.பொது:

எனவே இந்நேர்வில் நாமக்கல் மாவட்டம் மோகனூர் வட்டம் பின்வரும் விவரப்படி உள்ள பட்டா நிலங்களை சிப்காட் சார்பில் தொழில் பூங்கா அமைக்கும் பணிக்காக தமிழ்நாடு தொழிலியியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம்-1997 (சட்டம் 10/99)ன்படி நில எடுப்புச் செய்ய அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெற பரிந்துரை செய்யப்படுகிறது.

மாவட்டம் / வட்டம்	கிராமங்களின் பெயர்	பட்டா நிலங்களின் விஸ்தீர்ணம் (ஹெக்டேர்)	நில உரிமை மாற்றம் செய்யப்பட உள்ள புறம்போக்கு நிலங்களின் விஸ்தீர்ணம் (ஹெக்டேர்)	மொத்த விஸ்தீர்ணம் (ஹெக்டேர்)
நாமக்கல்/ மோகனூர்	வளையப்பட்டி	83.16.15	95.67.35	178.83.5
	நா.புதுப்பட்டி	112.11.0	19.09.0	131.20.0
	அரூர்	0.00.00	16.40.0	16.40.0
மொத்தம் (ஹெக்டேரில்)		195.27.15	131.16.35	326.43.5
மொத்தம் (ஏக்கரில்)		482.32	323.97	806.29

அதே போன்று 131.16.35 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களில் அவற்றில் உள்ள நீர்வழிப்பாதைகளுக்கு எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்றும், கஸ்தூரிரங்கன் பெருமாள் கோவிலுக்கு மூன்று கிராமங்களிலுருந்தும் பொதுமக்கள் செல்வதற்கு உள்ள பாதையினை எவ்வித இடையூறும் செய்யாமல் பாதை பயன்பாட்டிலேயே வைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், வளையப்பட்டி, நா.புதுப்பட்டி, மற்றும் அரூர் கிராமங்களில் மேலே கூறப்பட்டுள்ளவாறு மொத்தம் 195.27.15 ஹெக்டேர் புன்செய் நிலங்களை சிப்காட் சார்பில் தொழிற் பூங்கா அமைக்கும் பொருட்டு தமிழ்நாடு தொழிலியியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம் 1997 (சட்டம் 10/99) உடன் இணைக்கப்பட்ட தமிழ்நாடு நில கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும்

967

செல்லத்தக்கதாக்குதல் சட்டம்–2019 (சட்டம் 38/2019)ன் படி நில எடுப்பு செய்ய நிர்வாக அனுமதியை அரசிடமிருந்து பெற்று வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு:

சரிபார்ப்பு பட்டியலின் படியான ஆவணங்கள்

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட ஆட்சித்தலைவர்
நாமக்கல்

நகல்:

தனி மாவட்ட வருவாய் அலுவலர்,
சிப்காட் நிலஎடுப்பு அலுவலகம்,
64பி, அப்பாவு நகர், 5–வது குறுக்குதெரு,
தருமபுரி – 636 701.

சுருக்கம்

தொழில் – சிப்காட் – நில எடுப்பு – நாமக்கல் மாவட்டம் மோகனூர் வட்டம் – வளையப்பட்டி, நா.புதுப்பட்டி மற்றும் அரூர் கிராமங்கள் – புல எண்கள் 83/2 மற்றும் பல – 195.27.15 ஹெக்டேர் பட்டா நிலங்கள் நில எடுப்பு – 131.16.35 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்கள் நில உரிமை மாற்றம் – சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க – தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997–ன் கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்தல் – நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள 19 சிறப்பு பணியாளர்கள் பணியிடங்கள் கால முறை ஊதியத்தில் 3 ஆண்டுகள் தோற்றுவித்தல் – நில எடுப்பு அலுவலராக தனி மாவட்ட வருவாய் அலுவலரை நியமனம் செய்தல் – நில எடுப்பிற்கான உத்தேச செலவினம் (ம) இதர செலவினமாக ரூ.253,06,86,032/–க்கு நிர்வாக அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக(சிப்காட்–நி.எ.) துறை

அரசாணை (நிலை) எண்.75

நாள்: 08.07.2024
குரோதி வருடம், ஆனி மாதம், 24,
திருவள்ளுவர் ஆண்டு – 2055

படிக்க:

1) நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் கடித எண்.11286/ 2022/எச்.1, நாள் 07.09.2023, 12.10.2023 மற்றும் 16.11.2023.
2) நில நிர்வாக ஆணையரின் கடித ந.க. எண்.LA.II (2)/5713866/2023, நாள் 25.12.2023.

******

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சியர் நாமக்கல் அவர்கள் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், வளையப்பட்டி, நா.புதுப்பட்டி மற்றும் அரூர் கிராம புல எண்கள் 83/2 மற்றும் பலவற்றில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டத்திற்கு 195.27.15 ஹெக்டேர் பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997–ன் கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்யவும், 131.16.35 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும், நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள 19 சிறப்பு பணியாளர் பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் 3 ஆண்டுகளுக்கு தோற்றுவிக்கவும் மற்றும் நில எடுப்பு அலுவலராக தனி மாவட்ட வருவாய் அலுவலரை நியமனம் செய்யவும், அரசின் நிர்வாக அனுமதி கோரி முன்மொழிவு அனுப்பியுள்ளார். அதன்படி, நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள நிலங்களின் விவரம்:–

மாவட்டம்/ வட்டம்	கிராமங்களின் பெயர்	பட்டா நிலங்களின் விஸ்தீர்ணம் (ஹெக்டேரில்)	நில உரிமை மாற்றம் செய்யப்பட உள்ள புறம்போக்கு நிலங்களின் விஸ்தீர்ணம் (ஹெக்டேரில்)	மொத்த விஸ்தீர்ணம் (ஹெக்டேரில்)
நாமக்கல் /மோகனூர்	வளையப்பட்டி	83.16.15	95.67.35	178.83.5
	நா.புதுப்பட்டி	112.11.0	19.09.0	131.20.0
	அரூர்	--	16.40.0	16.40.0
மொத்தம்		195.27.15	131.16.35	326.43.5
மொத்தம் (ஏக்கரில்)		482.32	323.97	806.29

2. மேற்படி நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள தனி மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான 19 சிறப்பு பணியாளர் பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் தோற்றுவித்திட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :-

வ. எண்.	பணியிடத்தின் பெயர்	தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	தனி மாவட்ட வருவாய் அலுவலர்	1	நிலை – 26 (ரூ.61900–196700)
2.	தனி வட்டாட்சியர்	2	நிலை – 20 (ரூ.37700–138500)
3.	துணை வட்டாட்சியர்	2	நிலை – 18 (ரூ.36900–116600)
4.	முதுநிலை வருவாய் ஆய்வாளர்	4	நிலை – 10 (ரூ.20600–75900)
5.	சார் ஆய்வாளர் (நில அளவை)	2	நிலை – 11 (ரூ.35400–112400)
6.	வரைவாளர்	2	நிலை – 8 (ரூ.19500–71900)
7.	தட்டச்சர்	2	நிலை – 8 (ரூ.19500–62000)
8.	அலுவலக உதவியாளர்	2	நிலை – 1 (ரூ.15700–50000)
9.	புல உதவியாளர்	2	நிலை – 1 (ரூ.15700–50000)
மொத்தம்		19	

மேற்படி சிறப்பு பணியாளர்களின் பணியிடங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஆகும் மொத்த சம்பள செலவினம், வாகன வாடகை செலவினம் மற்றும் பயண செலவினம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது :-

வ. எண்	செலவின விவரம் (தோராயமாக)	தொகை (ரூ.)
1.	சம்பளம் மற்றும் செலவினமாக	3,05,69,062/-
2.	வாகன வாடகை செலவினமாக	57,60,000/-
3.	பயண செலவினமாக	5,26,680/-
	மொத்தம்	3,68,55,742/-

3. நாமக்கல் மாவட்டம். மோகனூர் வட்டம், வளையப்பட்டி, நா.புதுப்பட்டி மற்றும் அரூர் கிராம புல எண்கள் 83/2 மற்றும் பலவற்றில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டத்திற்கு 195.27.15 ஹெக்டேர் பட்டா நிலங்களுக்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் உத்தேச நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அ) நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு சட்டம், 2013-ன்படி இழப்பீட்டுத் தொகை கணக்கீட்டு விவரம் :-

வ. எண்.	விவரம்	இழப்பீட்டுத் தொகை (ரூ)
1.	தற்போதைய அரசு வழிகாட்டி மதிப்பின்படி 195.27.15 ஹெக்டேர் பட்டா நிலங்களின் அடிப்படை நில மதிப்பு.	43,35,43,738.00
2.	உத்தேச நில மதிப்பு (அடிப்படை நில மதிப்பில் 150%)	65,03,15,607.00
3.	பெருக்கு காரணியுடன் கூடிய நிலமதிப்பு (1.25)	81,28,94,508.75
4.	கட்டடங்களின் மதிப்பு	கணக்கிடப்பட வேண்டும்
5.	மரங்களின் மதிப்பு	கணக்கிடப்பட வேண்டும்
6.	கூடுதல் (வ.எண்.3+4+5)	81,28,94,508.75
7.	வ.எண்.(6)-க்கு 100% ஆறுதல் தொகை	81,28,94,508.75
8.	கூடுதல் சந்தை மதிப்பு (2 ஆண்டுகளுக்கு 12% (தோராயமாக) வ.எண்.2-க்கு)	15,60,75,745.68
9.	மொத்தம் (6+7+8)	178,18,64,763.18
10.	நிருவாக செலவினம் 14.5% (வ.எண்.9-க்கு)	25,83,70.390.66
	மொத்தம் (வ.எண்.9+10)	204,02,35,153.84 (அ) 204,02,35,154.00

ஆ) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பிற்கான இழப்பீட்டுத் தொகை கணக்கீடு விவரம்:-

வ. எண்.	விவரம்	இழப்பீட்டுத் தொகை (ரூ.)
1.	தற்போதைய அரசு வழிகாட்டி மதிப்பின்படி 195.27.15 ஹெக்டேர் பட்டா நிலங்களின் உத்தேச சந்தை மதிப்பு	43,35,43,738.00
2.	உத்தேச நில மதிப்பு (அடிப்படை நில மதிப்பில் 150%)	65,03,15,607.00
3.	அதிகபட்ச பேச்சுவார்த்தை மதிப்பு 275%	178,83,67,919.25
4.	கட்டடங்களின் மதிப்பு	கணக்கிடப்பட வேண்டும்
5.	மரங்களின் மதிப்பு	கணக்கிடப்பட வேண்டும்
6.	கட்டடங்கள் மற்றும் மரங்களுக்கான ஆறுதல் தொகை (100%)	கணக்கிடப்பட வேண்டும்
7.	கூடுதல் (வ.எண்.4+5+6)	கணக்கிடப்பட வேண்டும்
8.	அடிப்படை மதிப்பு (வ.எண்.3+7)	178,83,67,919.25
9.	ஊக்கத் தொகை (அடிப்படை மதிப்பில் 25%) (வ.எண். 8-க்கு)	44,70,91,979.81
10.	நிருவாக செலவினம் 14.5% (வ.எண்.9-க்கு)	25,83,70,390.66
	மொத்தம் (வ.எண்.8+9+10)	249,38,30,289.72 (அ) 249,38,30,290.00

4. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கோரிக்கையினை ஏற்று நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், வளையப்பட்டி, நா.புதுப்பட்டி மற்றும் அரூர் கிராம புல எண்கள் 83/2 மற்றும் பலவற்றில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டத்திற்காக, 195.27.15 ஹெக்டேர் பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997-ன்கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திடவும், 131.16.35 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களை உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நில மாற்றம்/நில உரிமை மாற்றம் செய்திடவும், நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள 19 சிறப்பு பணியாளர் பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் 3 ஆண்டுகளுக்கு தோற்றுவிக்கவும் மற்றும் நில எடுப்பு அலுவலராக தனி மாவட்ட

வருவாய் அலுவலரை நியமனம் செய்திடவும், நில எடுப்பிற்கான தோராய இழப்பீட்டுத் தொகை ரூ.249,38,30,290/– மேற்படி பணியிடங்களுக்கான சம்பளம் மற்றும் இதர செலவினங்களுக்கான மொத்த தொகை ரூ.3,68,55,742/– ஆக மொத்தம் ரூ.253,06,86,032/–ஐ நிதி ஒதுக்கீடு செய்தும் உரிய நிர்வாக அனுமதி மற்றும் ஆணைகள் பிறப்பிக்குமாறு நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

5. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கோரிக்கை மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், வளையப்பட்டி, நா.புதுப்பட்டி மற்றும் அரூர் கிராம புல எண்கள் 83/2 மற்றும் பலவற்றில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டத்திற்காக, 195.27.15 ஹெக்டேர் பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997–ன்கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திடவும், 131.16.35 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களை உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நில உரிமை மாற்றம் செய்திடவும் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது. இந்நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள 19 சிறப்பு துணையாளர் பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் 3 ஆண்டுகளுக்கு தோற்றுவிக்கவும் (மேலே பத்தி 2–ல் விவரித்தவாறு) மற்றும் நில எடுப்பு அலுவலராக தனி மாவட்ட வருவாய் அலுவலரை நியமனம் செய்திடவும் நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. நில எடுப்பிற்கான தோராய இழப்பீட்டுத் தொகை, மேற்படி பணியிடங்களுக்கான சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவைகளுக்காக மொத்த தொகையான ரூ.253,06,86,032/–ஐ (ரூபாய் இருநூற்று ஐம்பத்து மூன்று கோடியே ஆறு இலட்சத்து என்பத்தாறாயிரத்து முப்பத்திரெண்டு மட்டும்) (நில எடுப்பிற்கான தோராய இழப்பீட்டுத் தொகை ரூ.249,38,30,290/– + சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் ரூ.3,68,55,742/–) சிப்காட் நிறுவனம் நிதி ஒப்பளிப்பு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலும், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்படுகிறார் : –

(i) நிலமதிப்பு கணக்கீடு செய்யப்படும்பொழுது அரசாணை (நிலை) எண்.29, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 24.01.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.411, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 06.08.2020–இல் உள்ள வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

(ii) நில உரிமை மாற்றம் செய்ய உள்ள இடத்தில் எந்த வித நீர்நிலை தடங்கள் இல்லை என்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.

(iii) அரசு புறம்போக்கு நிலங்களை சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்குரிய உரிய முன்மொழிவினை நில நிர்வாக ஆணையர் வழியாக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(iv) தற்காலிக பணியிடங்கள் தோற்றுவித்த பின்னர் நடைமுறையிலுள்ள உரிய விதிகளின் அடிப்படையில் அப்பணிநியமனங்கள் செய்யப்பட வேண்டும்.

7. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் தோராயமாக நிர்ணயிக்கும் நிலமதிப்பினை சிப்காட் நிறுவனத்தால் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் வைப்பீடு (Deposit) செய்யப்பட வேண்டும்.

"K– வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள் – 8443–00 உரிமையியல் வைப்பீடுகள் – 101 வருவாய் வைப்பீடுகள் – AA வருவாய் வைப்பீடுகள் – 801–வரவுகள் – 02 – வட்டி பெறா வைப்பீடுகள் (ததொகு 8443–00–101– AA– 801 02) (வரவுகள்)"

8. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய தொகையை, சிப்காட் நிறுவனத்திடமிருந்து பெற்று கீழ்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்படவேண்டும்:–

"0070 ஏனைய நிருவாகப் பணிகள் 60 – ஏனைய பணிகள் – 800 ஏனைய வரவுகள் CH தனியார், பொதுத் துறைகளுக்காகச் செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் மத்திய அரசு தொடர்பான திட்டப் பணிக்காக செய்த நிருவாகப் பணி குறித்த பணியாளரமைப்புச் செலவை ஈடு செய்தல் –227– வரி அல்லாத கட்டமைப்பு கட்டணங்கள் 99 – ஏனையவைகள் (ததொகு 0070–60– 300– CH 227 99) ".

9. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்: –

"2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு மாநிலச் செலவினங்கள் AN – தொழில் வளர்ச்சி மையங்களுக்காக சிப்காட் நிறுவனத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான பணியாளரமைப்பு 301 சம்பளங்கள் (த.தொ.கு 2053 00 094 AN 301 00)"

10. இத்திட்டத்திற்கான நில எடுப்பு பணி முடிவடைந்த பின் செலவுகள் அனைத்தும் உரிய கணக்கு தலைப்பிற்கு, உரிய முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். மேலும், இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் செலவினை கவனித்து அவற்றினை உரிய கணக்குத் தலைப்பில் வைப்பு செய்வதை கண்காணிக்கும்படியும் நில நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. நிலக் கையகத்தில் கவரப்படும் அரசு புறம்போக்கு நிலங்களை சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு முன்மொழிவினை நில நிர்வாக ஆணையர் வழியாக அரசின் வருவாய்த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்படுகிறார்.

12. இவ்வாணையானது நிதித்துறை அ.சா.எண்.(e–file)368/2024, நாள் 08.07.2024 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி. அருண் ராய்
அரசுச் செயலாளர்

பெறுநர்:
நில நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

மேலாண்மை இயக்குநர்,
சிப்காட்,
19-A, ருக்மணி லக்ஷ்மிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்டம்.
சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்,
மோகனூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

முதன்மை பொது கணக்காயர் (சி.ஏ), சென்னை-600 018,
முதன்மை கணக்காயர் (தணிக்கை). சென்னை-600 018.

மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல் மாவட்டம்,
துணை கருவூல அலுவலர், மோகனூர் வட்டம்,

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.

மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (தொழில்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (நி.நி.2)த் துறை,
சென்னை – 600 009.

நிதி (வ.செ.பொ-I/II/வ.வ.1/வருவாய்/
ஊதிய பிரிவு-I/தொழில்)துறை, சென்னை-600 009

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும்
வர்த்தக(அ.ந.மு.II)த் துறை, சென்னை – 600 009.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

47

Translation

SUMMARY

Industry - SIPCOT - Land Acquisition - Namakkal District, Mohanur Taluk - Valaipatti, N. Puduppatti, and Arur Villages - Survey Numbers 83/2 and others - 195.27.15 hectares of patta land acquisition - 131.16.35 hectares of government poramboke land conversion - For setting up a SIPCOT industrial park under the Tamil Nadu Land Acquisition for Industrial Purposes Act, 1997 (or) through individual negotiations - Appointment of 19 special staff positions on a temporary basis with salary for three years to carry out land acquisition work - Appointment of a separate district revenue officer as the Land Acquisition Officer - Approval of estimated costs (and) other expenses for
Rs. 253,06,86,032/- - Order - Issued.

Department of Industries, Investment Promotion and Commerce (SIPCOT-NIA).

G.O.(Standing) No.75

Date: 08.07.2024,
Krodhi Year,
Aani Month, 24,
Thiruvalluvar Year - 2055

1. Namakkal District Collector's Letter No. 11286/2022/H.1, dated 07.09.2023, 12.10.2023, and 16.11.2023.
2. Commissioner of Land Administration's Letter No. LA.II (2)/5713866/2023, dated 25.12.2023.

Order:

Based on the letter submitted by the District Collector of Namakkal, he has proposed acquiring 195.27.15 hectares of patta land in Survey Numbers 83/2 and others across Valaipatti, N. Puduppatti, and Arur villages in Mohanur Taluk, Namakkal District, for establishing a SIPCOT industrial park. This acquisition is to be carried out under the Tamil Nadu Land Acquisition for Industrial Purposes Act, 1997, or through individual negotiations. Additionally, it includes converting 131.16.35 hectares of government poramboke land for this purpose. To execute the land acquisition process, 19 special staff positions will be created for a period of three years on a temporary basis with appropriate remuneration. A separate district revenue officer will also be appointed as the Land Acquisition Officer. The District Collector has forwarded this proposal for administrative approval from the government. The details of the lands to be acquired and converted are as follows:

(42)

Table 1:

District/Taluk	Names of Villages	Extent of Patta Lands (in Hectares)	Extent of Government Poramboke lands to be converted (in Hectares)	Total Extent (in Hectares)
Namakkal/Mohanur	Valaiyapatti	83.16.15	95.67.35	178.83.5
	N. Pudupatti	112.11.10	19.09.0	131.20.0
	Arur	-----	16.40.0	16.40.0
	TOTAL	195.27.15	131.16.35	326.43.5
	TOTAL (in Acres)	482.32	323.97	306.29

2. The proposal recommends the creation of 19 special staff positions under the leadership of a separate district revenue officer on a temporary salary basis to carry out the aforementioned land acquisition tasks. The details are as follows:

Table 2:

S.No:	Name of the Position	No. of Staffs to be placed	Salary Rate
1.	District Revenue Officer (Separate)	1	Level – 26 (Rs. 61900 – 196700)
2.	Tahsildar (Separate)	2	Level – 20 (Rs.37700 – 138500)
3.	Assistant Tahsildar (Separate)	2	Level -18 (Rs.36900 – 116600)
4.	Senior Revenue Inspector	4	Level – 10 (Rs. 20600 – 75900)
5.	Surveyor (Land Measurement)	2	Level – 11 (Rs. 35400 – 112400)

6.	Draftsman	2	Level – 8 (Rs. 19500 – 71900)
7.	Typist	2	Level – 8 (Rs. 19500 – 62000)
8.	Office Assistant	2	Level – 1 (Rs. 15700 – 50000)
9.	Field Assistant	2	Level – 1 (Rs. 15700 – 50000)
	TOTAL	19	

The total salary expenses, vehicle rental expenses, and travel expenses for the aforementioned special staff positions for a period of three years have been calculated as follows:

Table 3:

S.No.	Details of the Expenses (Approximately)	Total (Rs)
1.	As Salary and Expenses	3,05,69,062/-
2.	As Vehicle Rental Expenses	57,60,000/-
3.	As Travel Expenses	5,26,680/-
		TOTAL: 3,68,55,742/-

3. For the establishment of the SIPCOT industrial park in Namakkal District, Mohanur Taluk, Valaipatti, N. Puduppatti, and Arur villages, in Survey Numbers 83/2 and others, a tentative land value determination has been made for the 195.27.15 hectares of patta land based on the government's guideline valuation.

A) The calculation details for compensation under the Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation, and Resettlement Act, 2013, based on the land acquisition process are as follows:

Table 4:

S.No:	Details	Compensation (Rs)

1.	Basic Land value for 195.27.15 hectares of patta land based on the current government guideline valuation	43,35,43,738.00
2.	Tentative land value (150% of the basic land value)	65,03,15,607.00
3.	Land value with additional factor (1.25)	81,28,94,508.75
4.	Value of buildings	To be calculated
5.	Values of trees	To be calculated
6.	Total of (S.No: 3 + 4+ 5)	81,28,94,508.75
7.	100% relief amount for S.No: 6	81,28,94,508.75
8.	Additional market value (12% for 2 years approximately) for S.No: 2	15,60,75,745.68
9.	Total of (S.No: 6+7+8)	178,18,64,763.18
10.	Administrative expenses of 14.5% for (S.No:9)	25,83,70.390.66
	TOTAL of (S.No: 9+10)	204,02,35,153.84 or 204,02,35,154.00

B) Details of the compensation calculation for land acquisition through individual negotiations are as follows:

Table 5:

S.No:	Details	Compensation (Rs)
1.	Tentative market value for 195.27.15 hectares of ptta land based on current government guide line valuation	43,35,43,738.00
2.	Tentative land value (150% of the basic land value)	65,03,15,607.00
3.	Maximum Negotiation Value (275%)	178,83,67,919.25
4.	Value of buildings	To be calculated
5.	Values of trees	To be calculated
6.	Relief amount for buildings and trees (100%)	To be calculated
7.	Total of (S.No: 4 +5+6)	To be calculated
8.	Basic value (S.No: 3+7)	178,83,67,919.25
9.	Incentive amount (25% of the basic value) (S.No:8)	44,70,91,979.81
10.	Administrative expenses of 14.5% for (S.No:9)	25,83,70,390.66
	TOTAL of (S.No: 8+ 9+10)	249,38,30,289.72 Or 249,38,30,290.00

4. In the letter presented in the second view, the Namakkal District Collector, upon accepting the request, has proposed the acquisition of 195.27.15

hectares of patta land in Survey Numbers 83/2 and others in Valaipatti, N. Puduppatti, and Arur villages in Mohanur Taluk, Namakkal District, for setting up a SIPCOT industrial park. The acquisition will be carried out under the Tamil Nadu Land Acquisition for Industrial Purposes Act, 1997, or through individual negotiations. Additionally, 131.16.35 hectares of government poramboke land will be converted or changed in land rights by following the proper procedures. To undertake the land acquisition process, 19 special staff positions will be created on a temporary basis for 3 years, and a separate District Revenue Officer will be appointed as the Land Acquisition Officer. The tentative compensation amount for the land acquisition is ₹249,38,30,290/-. The total salary and other expenses for the above-mentioned positions amount to ₹3,68,55,742/-, making the total allocation ₹253,06,86,032/-. The Land Administration Commissioner has recommended to the government to approve the required administrative permissions and orders.

5. The Government, after careful consideration of the request from the Namakkal District Collector and the recommendation from the Land Administration Commissioner, has approved the following:

For the establishment of the SIPCOT industrial park in Namakkal District, Mohanur Taluk, Valaipatti, N. Puduppatti, and Arur villages, in Survey Numbers 83/2 and others, 195.27.15 hectares of patta land will be acquired under the Tamil Nadu Land Acquisition for Industrial Purposes Act, 1997, or through individual negotiations. Additionally, 131.16.35 hectares of government poramboke land will be converted or have their land rights changed by following the proper procedures. Administrative permission is granted to carry out the land acquisition activities, which will involve creating 19 special staff positions on a temporary basis for 3 years (as detailed in Paragraph 2 above), and appointing a separate District Revenue Officer as the Land Acquisition Officer. The tentative compensation amount for land acquisition, along with the salary and other expenses for the above-mentioned positions, totals ₹253,06,86,032/- (Rupees two hundred fifty-three crore six lakh eighty-six thousand thirty-two only). This includes ₹249,38,30,290/- as the tentative compensation for land acquisition, and ₹3,68,55,742/- for salaries and other expenses. SIPCOT is directed to allocate the required funds for this purpose.

6. Furthermore, the Namakkal District Collector is instructed as follows:

- When conducting the land valuation, the procedures outlined in Government Order (Land) No. 29, Revenue and Disaster Management Department, dated

24.01.2019, and Government Order (Land) No. 411, Revenue and Disaster Management Department, dated 06.08.2020, should be followed.

- It must be ensured that there are no water level obstructions at the location where the land rights are to be transferred.

- The appropriate proposal for the transfer of land rights of government poramboke land to SIPCOT should be sent through the Land Administration Commissioner to the Government's Revenue and Disaster Management Department.

- After the creation of temporary positions, the appointments should be made based on the applicable existing rules and procedures.

7. The land value tentatively determined by the Namakkal District Collector should be deposited by SIPCOT under the following accounting headings:

"K - Deposits and Advances (b) Non-interest bearing deposits - 8443-00 Ownership deposits - 101 Revenue deposits - AA Revenue deposits - 801 - Revenues - 02 - Non-interest bearing deposits (Total 8443-00-101-AA-80102) (Revenues)"

8. The salary and other amounts for the land acquisition officers should be received from the SIPCOT company and deposited under the following accounting headings:

"0070 Other Administrative Activities 60 - Other Activities 800 - Other Revenues CH private - Compensation for land acquisition work and administrative work related to central government schemes for private and public sectors - 227 - Non-taxable Infrastructure Fees 99 - Others (Total: 0070-60-800-CH 227 99)"

9. The salary and other expenses for the land acquisition officers should be charged under the following accounting headings:

"2053 00 District Administration - 094 Other Personnel Structure State Expenditures AN - Personnel structure for land acquisition by SIPCOT for industrial development centres 301 Salaries (Total: 205300 094 AN 301 00)"

53

Translation

10. After the completion of the land acquisition work for this project, all expenses must be transferred to the appropriate account headings, and the process should be followed properly. Additionally, the Land Administration Officer is instructed to monitor and ensure that the expenses for this project are deposited in the appropriate account headings.

11. The proposal for the transfer of government surplus land to the SIPCOT company should be sent to the Revenue Department of the Government through the Land Administration Officer for approval.

12. This order is issued with the approval of the Finance Department, File No: (e-file) 368/2024, dated 08.07.2024.

//By the Governor's order//

V. Arun Rai
Secretary to the Government

To:
Commissioner of Land Administration ,
Cheppak,
Chennai 600 005.

Director of Operations,

SIPCOT,
19-A, Rukmani Lakshmipathy Road,
Egmore,
Chennai 600 008.

District Collector,
Namakkal District.

Special District Revenue Officer,
Mohanur Taluk,
Namakkal District.

Principal Accountant General (A&E), Chennai - 600 018.

(54)

Translation

Principal Auditor General (Audit), Chennai - 600 018.

District Treasury Officer, Namakkal District.

Sub-Treasury Officer, Mohanur Taluk.

Copy to:

1. Hon'ble Chief Minister's Office, Chennai - 600 009.

2. Special Personal Assistant to Hon'ble Minister (Finance and Human Resources Management), Chennai - 600 009.

3. Special Personal Assistant to Hon'ble Minister (Revenue and Disaster Management), Chennai - 600 009.

4. Special Personal Assistant to Hon'ble Minister (Industries), Chennai - 600 009.

5. Revenue and Disaster Management Department (NIN2), Chennai - 600 009.

6. Finance Department (V.C.Po-1/11/V.V.1/Revenue/Salary Division-1/Industries), Chennai - 600 009.

7. Department of Industries, Investment Promotion, and Commerce (A.N.Mu.11), Chennai 600 009.

File copy/Reference copy.

// Issued under the order of the Governor //

மத்திய அரசினர் மாநில அரசினரிடம் கலந்து ஆலோசனை செய்து கொண்டு அந்த நிலத்தை எந்நிபந்தனைகளுக்குட்படுத்திக் கொடுக்க வேண்டுமென மாநில அரசினர் விரும்புகிறார்களோ அந்நிபந்தனைகளுக்குக் கூடுமான வரையில் உட்படுத்தி மத்திய அரசினர் அந்த நிலத்தை விற்றுவிடலாம். இருப்பினும், எல்லாவற்றிலுமே மாநில அரசினரின் இசைவை மத்திய அரசினர் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கட்டுப்பாடு அவ்வரசினருக்கில்லை. இருப்பினும், மாறுபாடு உள்ளவற்றில் வரம்புகளையும் நிபந்தனைகளையும் விதிக்கத்தக்க தனி அதிகாரம் மத்திய அரசினரிடமே உள்ளது.

(19–11–1953 தேதி, 20 எண் வ.து.வா.செ.அச்சு)

(iii) சென்னை மாநகரிலுள்ள நிலங்களுக்குரிய தனி விதிகள்.– மாநில அரசினருக்கும் அயலாருக்கும் மத்திய அரசாங்க நிலத்தை விற்பனை செய்யும்போதும், மத்திய அரசினருக்கு மாநில அரசினர் தங்கள் நிலத்தை விற்பனை செய்யும்போதும், அவ்விற்பனைகள் பின்வரும் தனி விதிகளுக்கு உட்படுத்தப் பெற்றிருக்க வேண்டும்.

மத்திய அரசாங்க நிலத்தை மாநில அரசினருக்கு விற்பனை செய்தல் அயலாருக்கு மத்திய அரசாங்க நிலத்தை விற்பனை செய்தல், சென்னை மாநகரில் நடைமுறையிலிருக்கும் மனைத் தீர்வை விதிகளை அனுசரித்துக் கணக்கிடப்படும் தீர்வையின் பாதி வீதத்தில் இந்நிலத்தில் மாநில அரசாங்கம் மனைத் தீர்வை நிர்ணயம் செய்ய வேண்டும். விற்பனையில் கிடைக்கப் பெறும் தொகையைப் பங்கிட்டுக் கொள்வதில், இம் மனைத் தீர்வையின் இருபத்தைந்து மடங்குத் தொகை மாநில அரசினருக்குச் சேர வேண்டிய தொகையாகக் கொள்ள வேண்டும். எந்த அரசாங்கத்தின் பங்குத் தொகை குறைந்துள்ளதாக இருக்கிறதோ அந்த அரசினருக்கு விற்பனையில் கிடைக்கத்தக்க தொகைக்கும் மேலே கணக்கிடப்பட்டுள்ள தவறான மூலதன மதிப்பீட்டுத் தொகைக்கும் உள்ள வித்தியாசத்தின் பாதித் தொகையைக் கொடுத்து, மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் தங்கள் தங்கள் கணக்கைச் சரி கட்டிக் கொள்ளுமாறு செய்விக்க வேண்டும்.

மாநில அரசினர் நிலத்தை மத்திய அரசினருக்கு விற்பனை செய்வது. தீர்வை இல்லாக் கைப்பற்று நிலத்திற்கு என்ன விலை மதிப்பு இருக்குமோ அத்தகைய நிலத்தின் பாதி விலை மதிப்புத் தொகையை மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும்.

(23–7–1941 தேதி, 2004 எண், வ.து.வா.செ.வரு.பலவ.) (19–11–1952 தேதி, 20 எண், வ.து.வா.செ.வரு.அச்சு)

(iv) உரிமை முதலியவை பற்றிய விவகாரங்களை முடிவு செய்தல்.– மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையே உரிமை முதலியவை பற்றிய எல்லா விவகாரங்களையும் அரசியல் அமைப்பின் 131–ஆவது விதியை அனுசரித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளிக்கும்.

(1–8–1950 தேதி, 2110 எண், அ.ஆ.வரு.கைப.)

2. நடப்பு விலை மதிப்புத் தொகை–விளக்கம்.– குறிப்பிட்ட நிலத்திற்கு எதிரில் வருவாய் பதிவேடுகளில் காட்டியுள்ள மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வையை அல்லது அந்நிலத்திற்கு எதிரில் வருவாய்ப் பதிவேடுகளில் நிலத் தீர்வை காட்டப்படாமலிருக்குமானால், அந்நிலத்திற்கு அருகில் சலுகை வீதங்களில் அல்லது சலுகையில்லாத வீதங்களில் நிர்ணயிக்கப் பெற்றுள்ள மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வை செலுத்துவதற்குட்படாத நிலங்கள் நீங்கலாக, குறிப்பிட்ட நிலங்களைப் போலுள்ள நிலங்களுக்கு எந்த வீதங்களில் மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வை விதிக்கப்பட்டுள்ளதோ, அதே வீதத்தில் மனைத்தீர்வை அல்லது நிலத் தீர்வையைச் செலுத்துவதற்குட்படுத்தி பகிரங்கமான விற்பனையில் அந்நிலம் விற்கப்படுமானால், அந்த நிலம் என்ன விலை பெறுமோ அந்த விலையே அந்த அந்த நிலத்திற்கு பொருத்தமான நடப்பு விலை மதிப்புத் தொகை ஆகிறது. இந்த நடப்பு விலை மதிப்புத் தொகையே மாநில மத்திய அரசாங்கத்தார்கள் தங்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் நடவடிக்கைகளில் தக்கவாறு வைப்பதிலும் செலவு எழுதுவதிலும் மேற்கொள்ளத்தக்கது.

(28–4–1928 தேதி, 936 எண், அ.ஆ.வரு.பல. 19–11–1953 தேதி, 20 எண், வ.து.வா.செ.வரு.கை.பல.
1–8–1950 தேதி, 2110 எண், அ.ஆ.வரு.பல. 14–7–1956 தேதி, 46206–சி/56–1 எண் அரசு குறிப்பு வரு
5–6–1928 தேதி, 46 எண், வ.து.வா.செ. 23–8–1956 தேதி, 1185 எண், வ.து.வா.செ.பலவ.)

RSO 24. தனிப்பட்டவர் அல்லது நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் அரசினர் வசமுள்ள நிலத்தை விட்டு வைத்தலும் நிலத் தீர்வை விலக்கு அளித்தலும்

(7–6–1956 தேதி, 3410 எண், அ.ஆ.வரு.கை.ப.) (20–9–1956 தேதி, 1316 எண், வ.து.வா.செ.பலவ.)

Scanned with OKEN Scanner

குறிப்பு.– (1) "தல ஆட்சிக் கழகம்", "தல அதிகாரி" "தல ஆட்சி நிதி" என்ற சொற்றொடர்கள் இந்த நிலை ஆணையில் எங்கெங்கெல்லாம் வருகின்றனவோ, அங்கெல்லாம் அவை பஞ்சாயத்துக்களையும் குறிக்கும்.

(2) இந்த நிலை ஆணையின் கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலம் கொடுக்கப்படுவதற்காகக் கம்பெனி அசோசியேஷன் அல்லது சங்கம் செய்து கொள்ளும் விண்ணப்பம் அந்தக் கம்பெனி அசோசியேஷன் அல்லது சங்கம், 1956–ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956–ஆம் ஆண்டு I–ஆவது மத்திய அரசுச் சட்டம்) 3 (1) (i) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு வந்தாலன்றி அல்லது 1860–ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860–ஆம் ஆண்டு XVI–ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880–ஆம் ஆண்டு சமயச் சங்கங்களின் சட்டம் (1880–ஆம் ஆண்டு I–ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1932–ஆம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1860–1932–ஆம் ஆண்டு சென்னை VI–ஆவது சட்டம்), 1942–ஆம் ஆண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942–ஆம் ஆண்டு VI–ஆவது மத்திய சட்டம்), 1838–ஆம் ஆண்டு ஈட்டுறுதிச் சட்டம் (1938–ஆம் ஆண்டு VI–ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் யூனியன்கள் சட்டம் (1926ஆம் ஆண்டு XVI–ஆவது மத்தியச் சட்டம்), அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியன் மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம் ஆகிய இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்பெற்றிருந்தாலன்றிக் கவனிக்கப்பட மாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன் கத்தோலிக் கிருத்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள் ஏனைய உரோமன் கத்தோலிக் சமய குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற்றிற்குப் பொருந்தாது.

7–9–1956 தேதி, 3410 எண், அ.ஆ.வரு. 17–9–1956 தேதி, 1316 எண், வ.து.வா.செ.கை.ப.

(3) நில அளவுச் செலவையும் எல்லை வரையறுத்தல் செலவையும் வசூலிப்பதைப் பொருத்தமட்டில் சங்கிலி அளவை நடைமுறை நூலில் உள்ள பொருத்தமான விதிகளைக் காண்க.

(7–9–1956 தேதி, 3410 எண், அ.ஆ.வரு.பல.) (20–9–1956 தேதி, 1316 எண், வ.து.வா.செ.பலவ.)

முகவுரை.– தல ஆட்சிக் கழகங்கள் அல்லது தனியான சங்கங்கள் அல்லது தனிப்பட்டவர்களிடம் பொதுப் பயன்களுக்காக (எடுத்துக் காட்டாக பள்ளிகள், கோயில்கள், சத்திரங்கள், சாலைகள், தல ஆட்சிக் கழக அலுவலகங்கள் முதலியவை) கிரயமின்றி அல்லது முழுக் கிரயம் அல்லது சலுகைக் கிரயம் வசூலிக்கப்பட்டு அரசாங்க நிலத்தை விட்டு வைப்பதைப் பற்றி இந்த நிலை ஆணை விதி வகுக்கிறது. இது நிலத் தீர்வை விலக்கைப் பற்றியும் கூறுகிறது.

குறிப்பு.– (1) மத்திய அரசாங்க நிலம் அல்லது மத்திய அரசாங்கத்தினிடம் சட்ட உரிமையிலுள்ள நிலத்திற்காகத் தல ஆட்சிக் கழகங்கள் செய்து கொள்ளும் விண்ணப்பங்களை மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கத்தின் வழியாக அனுப்ப வேண்டும். இந்த நிலை ஆணை மாநில அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை மாத்திரம் மேலே குறிக்கப்பட்டுள்ளவாறு விட்டு வைத்தல் பற்றியதாகும்.

(2) தல ஆட்சிக் கழகங்களாயினும் தனிப்பட்ட சங்கங்களாயினும் அவற்றின் அல்லது தனிப்பட்டவர்களின் கல்வி சம்பந்தமான உபயோகங்களுக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள், சிறுவர்கள் நிலையங்களுக்கென்றால் மாவட்டக் கல்வி அலுவலர் வழியாகவும், சிறுமியர் நிலையங்களுக்கென்றால் மகளிர் பள்ளி ஆய்வாளர் வழியாகவும் ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

(25–10–1943 தேதி, 1359 வ.து.வா.செ.அச்சு.பலவ) (7–9–1956 தேதி, 3410 எண், அ.ஆ.வரு.கைப.)
(11–10–1923 தேதி, 2695 அ.ஆ.வரு.கைப.) (20–9–1956 தேதி, 1316 எண், வ.து.வா.செ.பலவ)

பிரிவு I - தனிப்பட்டவர், நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் அரசினர் நிலத்தை விட்டு வைத்தல்

(7–9–1956 தேதி, 3410 எண், அ.ஆ.வரு.கைப.) (20–9–1956 தேதி, 1316, எண், வ.து.வா.செ.பலவ.)

1. பொதுவான கொள்கைகள்.– வருமானமில்லாத பொது உபயோகங்களுக்காக அநுபோகம் செய்து கொள்ளப்படுவதற்காக அரசினர் நிலம் சாதாரணமாக யாதொரு தொகை வசூலிக்கப்படாமல் கொடுத்துவிடத் தக்கதாகும். இருப்பினும், அரசினர் செலவில் முன்னதாக விலைக்கு வாங்கப் பெற்ற நிலத்திற்கும் வருமானமுள்ள உபயோகங்களுக்காகத் தல ஆட்சிக் கழகங்களுக்குக் கொடுக்கப்படும் நிலங்களுக்கும், ஒரு கம்பெனிக்கு அல்லது தனிப்பட்டவர் ஒருவருக்கோ ஒரு நிலையத்திற்கோ எத்தகைய பொது உபயோகத்திற்காகக் கொடுக்கப்பெறும் நிலத்தின் நடப்பு விலைக்கிரயம் வசூலிக்க வேண்டுமா என்பதை ஆலோசனை செய்ய வேண்டும்.

Scanned with OKEN Scanner

2. அரசினர் நிலத்தைக் கொடுப்பதற்குரிய அதிகார வரம்புகள்.– உண்மையில் பொது உபயோகத்திற்காகத் தல ஆட்சிக் கழகங்களிடம் 20,000 ரூபாய் நடப்பு விலை மதிப்புத் தொகைக்கு அதிகமாக இல்லாத அரசினர் நிலத்தையும் தனிப்பட்ட சங்கம் அல்லது நிலையம் அல்லது தனிப்பட்டவர்களிடம் 3,000 ரூபாய் நடப்பு விலை மதிப்புத் தொகைக்கு அதிகமில்லாத அரசினர் நிலங்களையும் விட்டு வைக்க வருவாய்த்துறை வாரியம் அதிகாரம் பெற்றுள்ளது. கட்டடங்கள் உள்ள அரசினர் நிலம் உட்பட அதன் மதிப்பு ஒவ்வொன்றிலும் 10,000 ரூபாய்க்கு அதிகமில்லாவிடில் அதையும் விட்டு வைக்க வருவாய்த்துறை வாரியம் அதிகாரம் வகித்துள்ளது.

குறிப்பு.– மேற் கண்ட அதிகாரம் வருவாய்த்துறைக் கூட்டுறவுக் கழகத்திற்கு வழங்கப் பெற்றிருக்கிறது.

நிலத்தின் இருப்புரிமையின் (பின்வரும் 3–ஆவது பத்தியில் விளக்கியுள்ளவாறு) நடப்பு விலை மதிப்புத் தொகையும் இழக்க நேரிட்ட நிலத் தீர்வையின் (பின்வரும் 8–ஆவது பத்தியை அனுசரித்து) மூலதன மதிப்பும் சேர்ந்து 10,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால் உண்மையில் பொது உபயோகங்களுக்காகத் தல ஆட்சிக் கழகங்களுக்கு அந்நிலத்தைக் கொடுப்பதற்கு வருவாய்த்துறை வாரியத்திற்கு அதிகாரமுண்டு. நிலத் தீர்வை இழக்க வேண்டிய நிலை ஏற்படாத போது அதன் மூலதன மதிப்புத் தொகையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாகாது. இவ்வாறான மொத்த மதிப்பு 3,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால் தல ஆட்சிக் கழகங்களிடம் நிலத்தை விட்டுவைக்க ஆட்சியர்களுக்கு அதிகாரமுண்டு. சாலைக்காகவும் அதற்குச் சம்பந்தப்பட்ட சரல், மற்றப் பொருள் சேகரித்து வைப்பதற்காகவும் நிலம் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் மேலே கணக்கிட்டவாறு மதிப்பு 3,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால், ஆட்சியர்கள் அத்தகைய நிலங்களைக் கொடுக்கலாம். இவ்வாறு மதிப்பிட்ட தொகையும் இழக்க நேர்ந்த நிலத் தீர்வையின் மூலதனத் தொகையும் சேர்ந்து 1,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், கோட்ட ஆட்சியாளர்கள் உண்மையில் பொது உபயோகங்களுக்காகத் தல ஆட்சி மன்றங்களுக்கு அரசாங்க நிலங்களைக் கொடுக்கலாம். இவை நீங்கலாகத் தல ஆட்சிக் கழகங்கள் தனிச்சங்கம் அல்லது நிலையம் அல்லது தனிப்பட்டவர்களுக்கு விற்பனையில் அல்லது நன்கொடையில் அல்லது ஒப்படையில் நிலத்திற்குத் தீர்வை செலுத்துவதற்குட்படுத்தி அல்லது நிலத் தீர்வை இல்லாமலே நிலங்களைக் கொடுப்பதற்கு மாநில அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும். இதற்காகக் குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(23–5–1941 தேதி, 1182 எண், அ.ஆ.வரு.) (20–9–1956 தேதி, 1316, வ.து.வா.செ.பலவ.)
(7–9–1956 தேதி, 3410 அ.ஆ.வரு.கை.ப.)

இவ்வாறு நிலம் கொடுப்பதற்கு அதிகாரம் பெற்றவர்கள் அவசர நிலையில் உரிய முறையில் பிறப்பிக்கத் தக்க ஆணைக்கு முன்னதாக நிலத்தை சுவாதீனம் செய்து அனுபவிப்பதற்கு அனுமதி அளிக்கலாம். இவ்வாறு அனுமதிக்கு முன், அத்தகைய அதிகாரிகள் நிலம் பெறுபவர்களிடமிருந்து நிலம் கொடுக்கப்படுவதற்கு விதிக்கப்படத்தக்க எல்லா நிபந்தனைகளுக்கும் தாம் உட்படுவதாக ஒரு ஒப்பந்தத்தை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

(6–7–1955 தேதி, 2081 எண், அ.ஆ.வரு.கை.ப.) (20–9–1956 தேதி, 1316 எண், வ.து.வா.செ.பலவ)
(7–9–1956 தேதி, 3410 எண், அ.ஆ.வரு.கை.ப.)

குறிப்பு.– (i) கொடுக்கத்தக்க நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையை அனுசரித்து இந்தப் பத்தியின் கீழ் மாநில அரசாங்கத்தின் அனுமதி தேவையாகுமானால் அத்தகைய அனுமதி பெறுவதற்காக வருவாய்த்துறை வாரியத்தின் வழியாக முன்னதாகவே விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.
(14–6–1920 தேதி, 1310, வ.து.வா.செ.பலவ)

அரசாங்கத்திற்குப் பணி செய்வதற்காக அல்லது சமூகத்திற்குப் பணிசெய்வதற்காகத் தனிப்பட்டவர்களுக்கு ஊதியமாக நிலம் கொடுப்பதற்கும் அவற்றின் நிலத் தீர்வை விலக்கு அளிப்பதற்கும் மாநில அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும்.

சேவை ஊழியர்களுக்கான நிலம் கொடுக்கப் பெறுவதைப் பற்றிய பொது நிபந்தனைகளை 73–வது நிலை ஆணையின் 5–ஆவது பத்தியில் காண்க.

(ii) அரசாங்க ஆணையினாலன்றி எந்த நிலத்தையும் அயல்நாட்டினர் வசம் விடக்கூடாது.

(iii) உண்மையில் தேவையான பொது உபயோகங்களுக்காகத் தல ஆட்சிக் கழகங்களிடம் நிலத்தை விட்டு வைத்தலில், நிலத்தைக் கோரித் தல ஆட்சிக் கழகம் தம்மிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்குமானாலும் நிலங்களை அனுபோகம் செய்து கொள்வதற்குத் தல ஆட்சிக் கழகத்திலிருந்து அனுமதி தந்தால் தான் அந்நிலத்தை

Scanned with OKEN Scann

உபயோகம் செய்து கொள்வதற்கான வேலையை நிறைவேற்ற முடியும் என்றும் அவசரமான காரியம் என்றும் ஆட்சியர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் கருதுவாரெனில் அவர் தமது அதிகார வரம்பிற்குள் நில அளவை மேற்கொள்ளுவதற்கு முன்னதாகவே நிலங்களை அனுபோகம் செய்து கொள்ளத் தல ஆட்சிக் கழகத்திற்கு அனுமதி அளிக்கலாம். நிலத்தை விட்டு வைப்பதற்குரிய ஆணையை வருவாய்த் துறை வாரியம் அல்லது அரசினர் பிறப்பிக்க வேண்டுமெனில் அத்தகைய சூழ்நிலையில் ஆட்சியர் வேண்டுமென அனுமதியைப் பெறுவதற்காகப் பொருத்தமான அதிகாரப் பீடத்திற்கு எழுதி மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. நடப்பு விலை மதிப்பு என்பதின் விளக்கம்.– பொருத்தமான நிலத்தீர்வை செலுத்துவதற்குட்படுத்தி நிலம் வெளிப்படையாய் விற்கப்பட்டால் அதற்கு என்ன விலை கிடைக்கக் கூடுமோ அதன் விலை மதிப்புத் தொகை தான் நடப்பு விலை மதிப்புத் தொகை அல்லது அனுபோக உரிமை எனப்படும். தீர்வை விதிக்கப்பட்ட நிலத்தைப் பொருத்த மட்டில், வருவாய்ப் பதிவேடுகளில் அதற்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ள நிலத் தீர்வை அல்லது மனைத் தீர்வை தான் அதன் பொருத்ததமான தீர்வையாகும். கிராமங்களில் புறம்போக்கு அல்லது தீர்வை விதிக்கப்படாத நிலங்களைப் பொருத்த மட்டில் அந்த இடத்தில் அருகில் தீர்வை செலுத்துவதற்குட்படாத அல்லது சலுகைத் தீர்வை செலுத்தி வரும் நிலங்கள் நீங்கலாக அதே தரமான தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களுக்கு எவ்விதங்களில் தீர்வை விதிக்கப் பெற்றுள்ளனவோ அவ்வீதங்களில் தீர்வை நிர்ணயம் செய்து கொண்டு இந்த அடிப்படையில் அந்த நிலத்தின் அனுபோக உரிமையின் மதிப்பை நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். 21–ஆவது நிலை ஆணை, 9–ஆவது பத்தியின் கீழ் நகரங்களாக அறிவிக்கப்பெற்றுள்ள இடங்களில் ஒப்புக்கொள்ளப் பெற்ற விவசாயத் தீர்வை பொருத்தமான நிலத்தீர்வை எனக் கொள்ள வேண்டும். அது இப்போது ஏக்கா ஒன்றுகு 6 ரூபாய் 25 பைசாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(19–6–1867 தேதி, 208 எண், வ.து.வா.செ.)
(18–8–1902 தேதி, 191 எண், வ.து.வா.செ.)
(8–3–1927 தேதி, 436 எண், அ.ஆ.வரு.)
(13–12–1927 தேதி, 2598 எண், அ.ஆ.வரு.)
(16–1–1928 தேதி, 3 எண், வ.து.வா.செ.)

4. நிலம் பெற்றவரிடம் மரத்தின் விலை மதிப்புத் தொகையை வசூலித்தல்.– 1882 ஆம் ஆண்டு சென்னை வனச் சட்டம் 26(எ) பிரிவில் மாவட்டத்திற்கு வகுக்கப்பெற்றுள்ள காட்டு வரி வீதங்களை அனுசரித்து நிலத்திலுள்ள மரங்களின் கிரயத்தை மதிப்பிட வேண்டும். இந்த அளவு வீதத்தைப் பொதுவாக அல்லது குறிப்பானவற்றில் ஆட்சியர் தமது யுக்தானுசாரத்தில் குறைத்துக் கொள்ளலாம். நிலக்கொடை பெற்றவரிடமிருந்து மரக் கிரயம் வசூலிக்க வேண்டும். நிலக் கொடை பெறுபவர் மரக் கிரயம் கொடுக்க இயலாதவராக இருப்பாரெனில், இந்த நிலை ஆணையின் கீழ் ஆட்சியர் கொடுக்கக் கூடிய நிலத்தைப் பொறுத்த வரையில் அவர் மரக் கிரயத்தைத் தள்ளுபடி செய்யலாம். கீழ்க்காணும் மாவட்டங்களில் நிலங்கள் கொடுக்கும்போதே அவற்றில் சந்தன மரங்கள் இருந்தாலும் அல்லது பிற்காலத்தில் சந்தன மரங்கள் வளருமானாலும் அவற்றின் உரிமை அரசாங்கத்துக்குச் சேர்ந்தது என்றே அவ்வுரிமையை அரசினருக்கு ஒதுக்கி வைத்து விட வேண்டும்.

வட ஆற்காடு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், நீலகிரி

(25–5–1929 தேதி, 1025 அ.ஆ.வரு.கை.ப.)
(5–6–1929 தேதி, 40, வ.து.வா.செ.)
(21–4–1938 தேதி, 1026, அ.ஆ.வரு.கை.ப.)
(3–5–1938 தேதி, 43, வ.து.வா.செ.அச்சு)

தல ஆட்சிக் கழகங்களிடம் நிலங்களை விட்டு வைப்பதில், அந்நிலங்களிலுள்ள மரங்களுக்கு கிரயம் செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ள தல ஆட்சிக் கழகங்களுக்கு விருப்பம் இல்லையென்றால், அந்நிலங்களிலுள்ள எல்லா மரங்களையும் அல்லது அம்மரங்களில் சிலவற்றைப் பொது நன்மைக்காகப் பாதுகாப்பது தக்கதென ஆட்சியர் கருதுவாரெனில், அம்மரங்களில் அரசினருக்கு இருக்கும் உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்–

(1) ஆட்சியர் அனுமதியின்றி உயிர்மரம் எதையும் வெட்டக்கூடாது என்றும்;

(2) உலர்ந்த அல்லது காற்றில் வீழ்த்தப்பட்ட மரங்களின் விற்பனைத் தொகையையும் 1-ஆவது நிபந்தனையை அனுசரித்து வெட்டப்பட்ட மரங்களின் விற்பனைத் தொகையையும் அரசினர் கணக்கில் வரவு

Scanned with OKEN Scanner

வைக்க வேண்டும் என்பவை போன்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி அம்மரங்களை தல ஆட்சிக் கழகங்களிடம் ஒப்புவித்து விட வேண்டும். நிலம் கொடுக்கப்படும் முன்னர் பொது நன்மைக்காக வேண்டாதனவாகிய மரங்களும், தல ஆட்சிக் கழகங்களால் எடுத்துக் கொள்ள மறுக்கப்பட்ட மரங்களும் விற்கப் பெற்று அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

(30-9-1938 தேதி, 2570 எண், அ.ஆ.வரு.) (13-10-1938 தேதி, 2859 எண், வ.து.வா.செ.பல.)

